## 2026 சட்டமன்றத் தேர்தலுக்குத் தயாராவோம்! கழகத்தின் 23 சார்பு அணிகளும்

# தனித்தனிப் படையெனச் செயல்பட்டு 'இலக்கு 200'-ஐ அடைவோம்!

## இராணிப்பேட்டையில் கழக சார்பு அணிகள் சந்திப்பில் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!






**இராணிப்பேட்டை, டிச.8-**

**இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில், 23 சார்பு அணிகளின் நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் இராணிப்பேட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சரும் தி.மு.க இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை வருடமே இருக்கின்ற நிலையில், ஒவ்வொரு அணியும் கழகத்தின் தனித்தனிப் படையென செயல்பட்டு இலக்கு-200-ஐ அடையவேண்டும், 7-வது முறையாக கழக ஆட்சியை அமைக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.**

**துணை முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

இன்றைக்கு இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள அண்ணன் ராணிப்பேட்டை காந்தி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் ஜெகத்ரட்சகன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் கட்டளையை ஏற்று, சார்பு அணிகளின் சந்திப்பு நிகழ்ச்சி இங்கு சிறப்பாக நடைபெறுகிறது.

### கனமழையில் மக்கள் பணி!

இந்நிகழ்ச்சியில் உங்களிடையே உரையாற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். சென்ற நான்கு நாட்களுக்கு முன்பு சென்னை, கடலூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட வடமாவட்டங்களில் பெய்த கனமழையில் நீங்கள் அத்தனைப்பேரும் களத்தில் நின்று மக்கள் பணியைச் செய்தீர்கள். அதனால்தான், அந்த வெள்ளத்தில் இருந்து விரைவாக மீண்டுவர முடிந்தது. அதற்கு முதலில் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். மாநில சுற்றுச்சூழல் அணியின் துணைச் செயலாளர் வினோத் காந்தி அவர்களுக்கு இந்த சமயத்தில் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழக உறுப்பினராக, இளைஞர் அணிச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, விளையாட்டுத்துறை அமைச்சராக, கழக நிகழ்ச்சிகள், பிரச்சாரம், திருமண நிகழ்ச்சிகள் எனப் பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு நான் பலமுறை வந்திருக்கிறேன். ஆனால், இந்த முறை மறக்க முடியாத ஒரு அனுபவம். ஏனென்றால், முதல்முறையாக துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்றபிறகு உங்களையெல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன்.

### வேண்டுகோள் விடுத்தேன்!

தலைவர், என்னை துணை முதலமைச்சர் என்று அறிவித்தவுடன், என்னை வாழ்த்துவதற்கு தமிழ்நாட்டிலிருந்து அனைவரும் சென்னைக்கு படையெடுத்து வந்தார்கள். அப்போது, 'தயவுசெய்து யாரும் சென்னைக்கு வராதீர்கள். உங்கள் மாவட்டத்திற்கு நானே வருகிறேன்' என்று எல்லோருக்கும் வேண்டுகோள் விடுத்தேன். உங்களைச் சந்தித்து உங்களின் வாழ்த்துகளைப் பெறுவதற்கு, நானே உங்கள் மாவட்டத்திற்கு வருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இன்றைக்கு உங்களின் வாழ்த்துகளையும் சேர்த்து பெறுவதற்காகத்தான் வந்திருக்கிறேன். இது சார்பு அணி நிர்வாகிகளுக்கான ஒரு ஆலோசனைக் கூட்டம். இங்கு துணை முதலமைச்சராகவோ, கழகத் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்ட சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினராகவோ மட்டும் பங்கேற்கவில்லை. நானும் ஒரு அணியின் செயலாளர் என்ற வகையில், இளைஞர் அணியின் செயலாளர் என்ற வகையில் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் உங்களை சந்திக்க வந்திருக்கிறேன்.

### கழகத்திற்கு மட்டும்தான் சிறப்பு!

இந்தியாவிலேயே எந்த ஒரு இயக்கத்திற்கும் இல்லாத ஒரு சிறப்பு நம் கழகத்திற்கு மட்டும்தான் இருக்கிறது. ஏனென்றால், நம் கழகத்தில் மட்டும்தான் 23 அணிகள் இருக்கிறது. அணிகள் என்று சொல்கிறோம். அதை ஆங்கிலத்தில் 'விங்' என்று சொல்வோம். யூத் விங், ஐ.டி. விங், டாக்டர்ஸ் விங், மெடிக்கல் விங், இன்ஜினீயர்ஸ் விங் என்று உள்ளன. 'விங்ஸ்' என்றால் தமிழில் 'சிறகுகள்' என்ற அர்த்தம்.

அந்த சிறகுகள் எல்லாம் சரியாக செயல்பட்டு உயர, உயரப் பறந்தால்தான் வெற்றியை நாம் சந்திக்க முடியும். வெற்றி நம்மைத் தேடி வரும் என்பதை நீங்கள் அனைவரும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நம் கழகத்திற்கு மட்டும்தான் 23 இதயங்கள் இருக்கின்றன என்று சொல்கின்ற அளவுக்கு, இந்த 23 அணிகளும் துடிப்போடும், துணிச்சலோடும் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

நம் கழகம்தான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை பார்த்தது, எமர்ஜென்சியையும் பார்த்தது. அவற்றால் நள்ளிரவு கைதுகளையும் பார்த்தது. குறிப்பாக மிசாவையும் பார்த்தது. இப்படி நம் கழகத்திற்கு மிகப்பெரிய வரலாறு இருக்கிறது.

### ஒவ்வொரு அணிக்கும் ஒரு வரலாறு!

கழகத்திற்கு மட்டுமல்ல, நம் ஒவ்வொரு அணிக்கும் ஒரு வரலாறு இருக்கிறது. தி.மு.க மாணவர் அணி வரலாற்றைத் தவிர்த்துவிட்டு, இந்தி எதிர்ப்பு போராட்டத்தைப் பேச முடியாது. மாணவர் அணி இருக்கும்போதுதான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டோம்.

அதேபோல், இளைஞர் அணிப் பங்களிப்பைத் தவிர்த்துவிட்டு தமிழ்நாட்டில் இளைஞர்களின் வளர்ச்சியைப் பற்றி பேசமுடியாது. இப்படி மகளிர் அணி, தொண்டர் அணி, வழக்கறிஞர்கள் அணி, சிறுபான்மையினர் அணி, மீனவர் அணி என்று ஒவ்வொரு அணியைப் பற்றிப் பேசினால் மணிக்கணக்கில் அல்ல, நாள் கணக்கில்கூட பேசலாம். ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு சிறப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட பெருமைமிகு கழக சார்பு அணிகளைச் சார்ந்த மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, கிளை நிர்வாகிகளை சந்திப்பதில் மிகவும் பெருமைப்படுகிறேன்.

### 40-க்கு 40 வெற்றி!

இது கட்சிக் கூட்டம் மாதிரி இல்லாமல், ஒரு குடும்ப நிகழ்ச்சி போல மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்றைக்கு ஏன் எல்லோரும் ஒன்றாக கூடி இருக்கிறோம்? நம் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நாம் சந்தித்த, தலைவர் பொறுப்பேற்ற அத்தனை தேர்தல்களிலும் தமிழ்நாட்டு மக்கள் நமக்கு வெற்றியை மட்டுமே கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அதுவும் குறிப்பாக, கடந்த மக்களவைத் தேர்தலில் 40-க்கு 40 இடங்களிலும், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் நாம் வெற்றி பெற்றோம். இந்த அரக்கோணம் தொகுதியில் போட்டியில் போட்டியிட்ட அண்ணன் ஜெகத்ரட்சகன் அவர்களை கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் நீங்கள்தான் வெற்றிபெற வைத்தீர்கள். அதற்கு நீங்கள் அத்தனைப்பேரும் உறுதுணையாக இருந்தீர்கள். உங்களின் உழைப்பு அதற்கு மிக மிக முக்கியமான காரணம்.

மிக மிக முக்கியமான தேர்தல்

அடுத்து 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை எதிர்நோக்கியிருக்கிறோம். இன்னும் ஒன்றரை வருடம்தான் இருக்கிறது. மிக மிக முக்கியமான தேர்தல், வர இருக்கின்ற சட்டமன்ற தேர்தல் என்பதை நான் சொல்லி உங்களுக்குத் தெரியவேண்டும் என்பதில்லை. அது உங்களுக்கே தெரியும். இந்தத் தேர்தலுக்கு நாம் இப்போதிலிருந்தே தயாராக வேண்டும் என்பதற்காகத்தான் இதுபோன்ற சார்பு அணிகளுக்கான கூட்டங்களை எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் நடத்திக்கொண்டு இருக்கிறோம். ஏற்கனவே, விழுப்புரம், தூத்துக்குடி, கடலூர் வடக்கு மாவட்டங்களில் நடைபெற்ற கூட்டங்களில் கலந்துகொண்டு, இன்றைக்கு ராணிப்பேட்டை மாவட்டத்திற்கு உங்களையெல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன்.

### ஜனநாயகப் போரில் யுத்தம்!

ஒரு போருக்குச் செல்ல வேண்டும் என்றால் சாரை சாரையாக மொத்தமாகப் போவதைவிட, தனித்தனியாக, அணி அணியாக திட்டமிட்டுச் சந்தித்தோம் என்றால் கண்டிப்பாக வெற்றி நிச்சயம். அதனால்தான் இந்த அணிகள் மிக மிக முக்கியம்.

அதனால், வர இருக்கின்ற தேர்தலில் நாமும் திட்டம் போட்டு அணி அணியாகத் தேர்தல் ஜனநாயகப் போரில் எதிரிகளுடன் யுத்தம் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் நம் முதலமைச்சர் அவர்கள் இந்த கூட்டத்தை நடத்த சொல்லி இருக்கிறார்.

2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் கழகம் பெறப் போகின்ற வெற்றியில் சார்பு அணிகளின் பங்களிப்பு மிக மிக முக்கியமானதாக இருக்க வேண்டும். அதற்கு நீங்கள் பொறுப்பெடுத்துக்கொள்ள வேண்டும்.

### மாவட்டக் கழகம்!

சார்பு அணிதானே, மாவட்டக் கழகம் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளும் என்று நாம் இருந்துவிடக் கூடாது. நீங்கள் ஒதுங்கிவிடக் கூடாது. சார்பு அணிகள் என்றால், அது சாதனை அணிகள். மாவட்டக் கழகம் உங்களைச் சார்ந்து இருக்கின்ற அணி என்பதை நீங்கள் நிரூபிக்க வேண்டும். அதன்படி, நீங்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சார்பு அணியில் இருந்துதான் இன்றைக்குக் கழகத்தில் பல முக்கிய தலைவர்கள் உருவாகி இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். மாணவர் அணியில் இருந்து வந்தவர்தான் இன்றைக்கு கழகத்தின் பொதுச் செயலாளர், இளைஞர் அணியில் இருந்து வந்தவர்தான் இன்றைக்கு கழகத்தின் தலைவர், தமிழ்நாட்டின் முதலமைச்சர்.

பல அமைச்சர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இப்படிப் பல பொறுப்புகளுக்கு சார்பு அணிகளில் சிறப்பாகச் செயல்பட்டு முன்னுக்கு வந்து இருக்கிறார்கள். ஆகவே, சார்பு அணி என்பது கழகத்தில் பணியாற்றுவதற்கான ஒரு பயிற்சிக் களம் என்று நீங்கள் நினைத்துக்கொள்ள வேண்டும்.

### உழைப்புக்கு ஏற்ற வெகுமதி!

உங்கள் ஒவ்வொருவரின் உழைப்பையும் தலைவர் அவர்கள் கண்காணித்துக்கொண்டுதான் இருக்கிறார். உங்களின் உழைப்புக்கு ஏற்ற வெகுமதியைத் தலைவர் நிச்சயம் சரியான நேரத்தில் உங்களுக்கு வழங்குவார். எனவே, உங்களின் பணிகளைத் தொய்வில்லாமல் எப்போதும் செய்துகொண்டே இருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டக் கழகம் நம்மை மதிக்கவில்லையே என்ற கவலை சிலருக்கு இருக்கலாம். தலைமையில் இருந்து மதிக்கவில்லையே என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். உங்களிடம், உங்கள் பொறுப்பில் ஒரு 100 வாக்காளர்கள் இருந்தார்கள் என்றால், நீங்கள் சொல்வதைத்தான் கேட்கப் போகிறார்கள். உங்களை யாராலும் தவிர்க்கவே முடியாது. அதை நீங்கள்தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும். அப்படி ஒவ்வொருவர் பின்னாலும் 200, 300 வாக்குகள் இருக்கிறது என்றால் நீங்கள் தவிர்க்க முடியாத நபராக மாறி விடுவீர்கள்.

அதேபோல், மாவட்டக் கழகத்துடன் கலந்துப்பேசி, உங்களின் பகுதியில் இருக்கின்ற நான்கு அல்லது ஐந்து பூத்துக்கு நான் பொறுப்பு என்று, அந்த பொறுப்பை எடுத்துக்கொண்டு நீங்கள் உங்களின் பணியை ஆற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, தேர்தல் வருகிறது. வாக்காளர் பட்டியலை சரி பாருங்கள். புதிய இளைஞர்களை கழக உறுப்பினர்களாகச் சேருங்கள்.

### திராவிட மாடல் அரசு!

நம் முதலமைச்சர் அவர்கள் கடந்த மூன்றரை வருடத்தில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார். நிச்சயம் ஒவ்வொரு வீட்டிலும் ஒருவராவது நம்முடைய திராவிட மாடல் அரசின் ஏதாவது ஒரு திட்டத்தில் பயன் பெற்று இருப்பார்கள். அவர்களிடம் சென்று உட்கார்ந்து பேசுங்கள். பொதுமக்களிடம் பேசுங்கள். திண்ணைப் பிரச்சாரம் செய்யுங்கள்.

நிறைய திட்டங்கள் உள்ளன. அதில் சில திட்டங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். விடியல் பயணம் திட்டம். மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதி திட்டம். அதில் மட்டும் 580 கோடி முறை மகளிர் பயணம் செய்துள்ளார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதம் தொள்ளாயிரத்திலிருந்து ஆயிரம் ரூபாய் வரை இந்தத் திட்டத்தின் மூலம் சேமிக்கிறார்கள்.

இந்தியாவிலேயே முதன்முறையாக மாணவர்களுக்குக் காலை உணவுத் திட்டம். அண்டை மாநிலங்களில் இருந்தெல்லாம் இங்கு வந்து பார்த்துவிட்டுச் செல்கிறார்கள். எப்படி இந்தத் திட்டத்தை செயல்படுத்துகிறீர்கள் என்று கேட்கிறார்கள்.

மாணவர்கள் பள்ளிப்படிப்பு மட்டும் படித்தால் பத்தாது, உயர்கல்விக்குச் செல்ல வேண்டும் என்று 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சென்று உயர்படிப்புப் படித்தாலும் மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன், மாணவிகளுக்குப் புதுமைப்பெண் என்ற திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இதையெல்லாம் மக்களுக்கு நினைவூட்டுங்கள். மக்களுக்கு மிகப்பெரிய பிரச்சினையே மறதிதான்.

சென்ற வருடம் செப்டம்பர் மாதத்திலிருந்து இப்போது வரை கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். கொடுக்கவே முடியாது என்று சொன்னார்கள். ஆனால், தலைவர் அவர்கள் சென்ற வருடம் செப்டம்பர் மாதம் பேறறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில் தொடங்கி, இன்றுவரை மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகையை ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் வாங்கிய ஒன்று அல்லது இரண்டு மாதங்கள் நினைவில் வைத்திருப்பார்கள். அதன்பிறகு மறந்து விடுவார்கள். இதை மக்களிடம் நினைவூட்டிக்கொண்டே இருக்க வேண்டும்.

ஒவ்வொரு வாக்காளரையும் குறைந்தது நான்கு முறையாவது சந்தித்து நேரடியாகத் தொடர்புகொண்டு பேசுங்கள். கழக அரசின் சாதனைகளைத் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள், துண்டுப் பிரசுரங்கள் மூலம் பொதுமக்களிடம் கொண்டுபோய்ச் சேருங்கள். மாவட்டக் கழகத்துடன் இணைந்த அவர்களின் வழிகாட்டலோடு பணிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### உழைப்பதற்கு தயாராக இருங்கள்!

உங்களை தினமும் கழகப் பணி செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. தலைவர் ஏற்கனவே முப்பெரும் விழாவில் சொன்னார். ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் அல்லது சனி, ஞாயிறுகளில் ஒரு நாள் கழகத்திற்காக உழைப்பதற்கு நீங்கள் தயாராக இருங்கள்.

இப்போது களத்தில் எவ்வளவு உழைக்கிறோமோ, அதைவிட மிக முக்கியம் சமூக வலைத்தளம். அதிலும் ஈடுபாட்டோடு இருங்கள். பதிவிடும்போது கவனமாக இருங்கள். நமக்கு மட்டும்தான் வரலாறு உண்டு. தி.மு.கவுக்கு மட்டும்தான் வரலாறு இருக்கிறது. அதனால் நம் வரலாற்றை மட்டும் பேசினால் போதும்.

### பதிலே சொல்லத் தேவையில்லை!

எதிர்க்கட்சியைப் பார்த்தீர்கள் என்றால், மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையாரின் நினைவு நாள் வந்தது. அங்கு சென்று பார்த்தீர்கள் என்றால், முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி என்ன சொல்கிறார்? அடுத்து நிச்சயமாக ஆட்சிக்கு வரப்போவது அ.தி.மு.க-தான் என்று அவர் சொல்லிவிட்டுப் போய்விட்டார். அதற்கு நாம் பதிலே சொல்லத் தேவையில்லை.

அவர்கள் கட்சியின் இன்னொரு அணி. டி.டி.வி.தினகரன் அவரே வந்து பதில் சொல்லிவிட்டார். 'அதெல்லாம் நடக்கவே நடக்காது. இதெல்லாம் கனவு' என்று சொல்லிவிட்டார். எனவே, தி.மு.க காரர்கள் யாரும் அதற்குப் பதில் சொல்லத் தேவையில்லை.

நான்கூட ஒரு பொதுக்கூட்டத்தில் சொன்னேன். அவர்கள் நடத்துவது கள ஆய்வு கிடையாது. அது கலவர ஆய்வு. எந்த இடத்தில் கூட்டம் போட்டாலும் அடிதடியில்தான் முடிகிறது. இருக்கைகளை எல்லாம் தூக்கிக் கொண்டு செல்கிறார்கள். அப்படித்தான் பரிதாபமாக இருக்கிறது எதிர்க்கட்சியின் நிலைமை.

நமக்குள் ஒரு சில கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், அதற்கெல்லாம் இது நேரம் கிடையாது. அதெல்லாம் பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினைகள்தான். கண்டிப்பாகப் பேசித்தீர்க்க வேண்டிய பிரச்சினைகள்தான். அதையெல்லாம் மூட்டைக் கட்டி வைத்துவிட்டு, இனி மேல் அடுத்து ஒன்றரை வருடம் தேர்தல் களத்திற்கு தயாராக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### 234 தொகுதிகளில் 200 தொகுதிகள்!

2026-ஆம் ஆண்டில் 234 தொகுதிகளில் 200 தொகுதிகளில் கழகம் வெற்றி பெறும் என்று நம்முடைய தலைவர் சொல்லியிருக்கிறார். உங்கள் மீது, உங்கள் உழைப்பின் மீது வைத்திருக்கின்ற அந்த நம்பிக்கை மட்டும்தான் அதற்குக் காரணம்.

நான் தலைவரிடம் சொல்லி இருக்கிறேன். 200 இல்லை 200-க்கு மேல் வெற்றி பெறுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. நிச்சயம் நம் அரசின் சாதனைகள், நம் முதலமைச்சருக்கு இருக்கின்ற நல்ல பெயர், திராவிட மாடல் ஆட்சிக்கு இருக்கின்ற நல்ல பெயருக்கு, நிச்சயம் நாம் வெற்றிபெறப் போவது உறுதி.

உங்கள் உழைப்பின் மீதுள்ள நம்பிக்கையில்தான் நான் அதைச் சொல்லியுள்ளேன். 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றிபெற வேண்டும் என்றால் நீங்கள் அத்தனைபேரும் 100% உழைக்க வேண்டும். அதற்கு உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள். அந்த வாக்குறுதியை காப்பாற்றுகின்ற வகையில் நீங்கள் அத்தனைப் பேரும் செயல்பட வேண்டும்.

### நீங்கள்தான் பொறுப்பு!

முதன்முதலில் தேர்தல் பணியைத் தமிழ்நாட்டில் ஆரம்பித்தது தி.மு.க-தான். எப்படி நாம் பணிகளை முதலில் ஆரம்பித்தோமோ, அதேமாதிரி தேர்தல் முடிவிலும் நாம் வெற்றிபெற்று முதல் இடத்திற்கு வந்தாக வேண்டும் அதற்கு நீங்கள்தான் பொறுப்பு.

2026-இல் கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும். தலைவர் அவர்கள் தொடர்ந்து 2-வது முறையாக முதலமைச்சராக வேண்டும் என்றால், இன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் அயராது, மனதில் எந்த பிரச்சினையும் வைத்துக்கொள்ளாமல், அதையெல்லம் மறந்துவிட்டு, கழகத்தின் வெற்றி மட்டும்தான் முக்கியம் என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

தேர்தலில் சிறப்பான ஒரு வெற்றிக் கூட்டணியை நம் தலைவர் அவர்கள் அமைப்பார். எப்படி அனைத்து தேர்தலிலும் ஒரு வெற்றி கூட்டணியை உருவாக்கி கொடுத்து இருக்கிறாரோ அதேபோல் இந்த முறையும் அந்த வெற்றிக் கூட்டணியை அமைத்துக் கொடுப்பார். எனவே, நம் வேலை, தலைவர் யாரை அறிவிக்கிறாரோ, அவரின் வெற்றிக்காக நாம் அனைவரும் சேர்ந்து பாடுபட வேண்டும் என்று உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பைக் கொடுத்த அண்ணன் ராணிப்பேட்டை காந்தி அவர்களுக்கு மீண்டும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, அண்ணன் ஜெகத்ரட்சகன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அனைத்து அணிகளின் நண்பர்கள் அத்தனைப்பேருக்கும் மீண்டும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் ஆர்.காந்தி, கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளர் ஈஸ்வரப்பன் மற்றும் கழக சார்பு அணியினர், கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

---

## அண்ணல் அம்பேத்கர் அறிவொளியில்

# சமத்துவ சமுதாயத்துக்கான பாதையில் நடைபோடுவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, டிச.8-**

**அண்ணல் அம்பேத்கர் அறிவொளியில் சமத்துவ சமுதாயத்துக்கான பாதையில் நடைபோடுவோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.**

**அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

"கற்பி, ஒன்றுசேர், புரட்சி செய்,"

பெரும்பாலான மக்களின் உரிமைகளையும் கண்ணியத்தையும் மறுத்த, இந்தச் சமுதாயத்தில் வேரூன்றிய



சமூக அநீதிகளுக்கு எதிராக நம்மிலிருந்து உருவாகி எதிர்த்த புரட்சியாளர் அம்பேத்கருக்குப் புரட்சி வணக்கம்!

கல்வியின் மகத்துவத்தை உணர்த்தி, தனது பேரறிவால் சமத்துவத்துக்கும் நீதிக்கும் பாதை சமைத்தவர் அவர்!

தனது சிந்தனைகளால் நமக்கு உரமூட்டி நம்மைப் பாதுகாக்கும் புரட்சியாளர் அம்பேத்கர் நம்முடைய வாளாகவும் கேடயமாகவும் என்றென்றும் வாழ்கிறார்! அண்ணலின் அறிவொளியில் சமத்துவச் சமுதாயத்துக்கான பாதையில் நடைபோடுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

## கொடநாடு கொலை - கொள்ளை வழக்கில்

# எடப்பாடி பழனிச்சாமியை விசாரிக்கலாம்!

## சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி!

*சென்னை, டிச.8-*

*கொடநாடு கொலை - கொள்ளை வழக்கில் எடப்பாடி பழனிச்சாமியை விசாரிக்க சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.*

*மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் கொடநாடு எஸ்டேட்டில் கடந்த 2017ஆம் ஆண்டு ஏப்ரல் 23ம் தேதி நள்ளிரவில், ஓம் பஹதூர் என்ற பாதுகாவலரை கொலை செய்து, ஆவணங்கள் கொள்ளையடிக்கப்பட்டதாக ஷோலூர் மட்டம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.*

*நீலகிரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள இந்த வழக்கில், முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, சசிகலா உள்ளிட்டோரை விசாரிக்க அனுமதிகோரி, வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தீபு, சதீசன், சந்தோஷ் சாமி ஆகியோர் நீலகிரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர்.*

*இந்த மனுவை விசாரித்த நீலகிரி மாவட்ட அமர்வு நீதிமன்றம், எஸ்டேட் மேலாளர் நடராஜனை மட்டும் விசாரிக்க அனுமதியளித்ததுடன், மற்றவர்களை விசாரிக்க கோரிய மனுவை தள்ளுபடி செய்து ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது.*

*இந்த உத்தரவை ரத்து செய்யக் கோரி தீபு, சதீசன், சந்தோஷ் சாமி ஆகியோர் சென்னை உயர் நீதி மன்றத்தில் மறு ஆய்வு மனுவை தாக்கல் செய்துள்ளனர்.*

*இந்த மனு, நீதிபதி வேல் முருகன் முன் விசாரணைக்கு வந்தது.அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் வினோத் குமார் கொடநாடு கொலை, கொள்ளை சம்பவம் வழக்கு தொடர்பாக மேல் விசாரணை நடைபெற்று வருவதாக கூறினார். இதையடுத்து, தற்போது எடப்பாடி பழனிசாமி முதல்வராக இல்லையே, எதிர் தரப்பு சாட்சியாக ஏன் விசாரிக்கக் கூடாது என கருத்து தெரிவித்த நீதிபதி, வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்திருந்தார்... இந்த நிலையில் இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி கீழ் நீதிமன்ற தீர்ப்பை ரத்து செய்து, எடப்பாடி பழனிச்சாமி, சசிகலா உள்ளிட்ட அனைவரையும் எதிர் தரப்பு சாட்சிகளாக விசாரிக்க அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளார்.*